இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 03-02-2025

# ஒன்றியத்தின் ஓரவஞ்சனை அறிக்கை

“ஒன்றிய நிதிநிலை அறிக்கை என்றாலே தமிழ்நாட்டைப் பொருத்தவரை ஓரவஞ்சனைதானா? தமிழ்நாடு என்ற பெயர்கூட தொடர்ந்து இடம்பெறுவதில்லையே? எத்தனையோ கோரிக்கைகளை முன்வைத்தோமே, அதில் ஒன்றைக்கூடவா உறுதிசெய்து அறிக்கையில் சேர்க்க மனம் வரவில்லை?” என்று வேதனையோடு கேட்டிருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

நேற்றைய தினம் வழங்கப்பட்டுள்ள ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டுக்கான எந்த சிறப்புத் திட்டமும் இல்லை. வழக்கமாகவே இருக்காது. அதுவே இப்போதும் தொடர்கிறது.

**ஒன்றிய அரசின் நிதித் தொகுப்புக்கு தமிழ்நாட்டில் இருந்து அதிக வரி வருவாய் கிடைக்கும் நிலையிலும் தமிழ்நாட்டிற்குப் பகிர்ந்தளிக்கப்படும் நிதியின் அளவு தொடர்ந்து குறைவாகவே இருந்து வருகிறது. இந்த நிலையில் பட்ஜெட்டிலும் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது.**

**ஒன்றிய அரசுக்கு மாநிலங்களிடம் இருந்து வரும் வரிகள் அனைத்தும் நிதிக் கமிஷன் அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையிலான பகிர்வு. விருப்புரிமைப் பகிர்வு. பேரிடர்கள் நேரும்போது ஒன்றிய அரசு அளிக்கும் நிதி என்ற விதங்களில் மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும். இதில் எல்லாம் தமிழ்நாடு தொடர்ந்து பாரபட்சம் காட்டப்படுகிறது.**

ஒன்றிய அரசின் திட்டங்களின் மூலமாகவும் மாநிலங்களுக்கு நிதி கிடைக்கும். ஆனால், பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு அப்படியான திட்டங்கள் அறிவிக்காமல் அநீதி செய்யப்பட்டிருக்கிறது.

நிதி கமிஷன் பரிந்துரைகள் படி மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய தென் மாநிலங்கள் இழப்பைச் சந்தித்து வருகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்புவரை, இந்த நிதிப்பகிர்வில் 7 முதல் 8 சதவிகிதம் வரை தமிழ்நாட்டிற்குக் கிடைத்தன. ஆனால், தற்போது இது 4 சதவிகிதமாக குறைந்துவிட்டது. ஆனால், வேறு சில மாநிலங்களுக்கு 10 முதல் 15 சதவிகிதம் அளவுக்கு நிதி பகிரப்படுகிறது.

தமிழ்நாடு, ஒன்றிய அரசுக்கு வரியாக ஒரு ரூபாய் அளித்தால், 29 பைசாதான் திரும்பக் கிடைக்கும். ஆனால், உத்தர பிரதேசத்திற்கு 2 ரூபாய்க்கு மேல் கிடைக்கும். தமிழ்நாட்டில் இருந்து வசூலித்த அதிக நிதி என்ன ஆனது? அதனால் நமக்கு எந்த பயனும் ஏற்படாத நிலையில் நிதிநிலை அறிக்கையிலும் தமிழ்நாடு வஞ்சிக்கப்படுகிறது.

எந்த மாநிலத்தில் தேர்தல் நடக்கிறதோ அந்த மாநிலத்துக்கு ஏதாவது ஒருசில திட்டங்களை அறிவித்துவிட்டு, மற்றபடி வாய்ஜாலம் காட்டுவது தான் பா.ஜ.க.வின் பாணியாக உள்ளது. நிதிநிலை அறிக்கை வெளியிட வேண்டுமே என்ற சடங்காக இது இருக்கிறது.

இந்தியப் பொருளாதாரத்தை முன்னேற்றும் முயற்சிகளும் இல்லை. மாநிலங்களை வளர்க்க வளர்ச்சித் திட்டங்கள் உருவாக்கும் எண்ணமும் இல்லை. வெறும் பம்மாத்தாகவே இருக்கிறது.

**பொருளாதார ஆய்வறிக்கையில் தமிழ்நாட்டை புகழ்கிறார்கள். “தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் பல திட்டங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளது’ என்கிறது ஆய்வறிக்கை. கல்வி, குறிப்பாக இல்லம் தேடி கல்வி, தொழில், உற்பத்தி, சிறுகுறு தொழில், வேளாண்மை உள்ளிட்ட துறைகளில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும்பங்கு வகித்து வருவதாக அந்த ஆய்வறிக்கை கூறுகிறது. இப்படி இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் தமிழ்நாட்டுக்கு உதவுவது மாதிரி நிதிநிலை அறிக்கை இருக்கிறதா என்றால் இல்லை. சிறப்பாகச் செயல் படும் மாநிலத்துக்கு சிறப்பு நிதி அல்லவா தரவேண்டும்?**

கடந்த ஜனவரி 31 அன்று தங்கத்தின் விலை சவரனுக்கு ஒரே நாளில் 960 ரூபாய் உயர்ந்து 61 ஆயிரத்தை கடந்து புதிய உச்சத்தை தொட்டிருக்கிறது. தங்கம் விலை அதிர்ச்சி அளிக்கும் வகையில் உயர்ந்த அன்றுதான் நாடாளுமன்றத்தில் 2024-2025-ம் நிதியாண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையை ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்தார்.

அந்த பொருளாதார ஆய்வறிக்கையில் ‘மதிப்புவாய்ந்த உலோகங்களை பொறுத்தவரை, தங்கம் விலை குறையும்’ என சொல்லி சிரிப்பு மூட்டியிருக்கிறார்கள். மறுநாள் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்த அன்று இரண்டு முறை தங்கம் விலை உயர்ந்துள்ளது. பொருளாதார அறிக்கையில் ‘குறையும்’ என்கிறார்கள். அறிக்கை வெளியானதும், ‘உயர்கிறது’. அப்படியானால் மண்டபத்தில் வேறு டீம் தயாரித்ததா இது மாதிரியான அறிக்கைகளை?

**வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன் கோல்நோக்கி வாழுங் குடி என்ற திருக்குறளை மேற்கோள் காட்டியிருக்கிறார் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நம்பி வாழ்கின்றன, அதுபோல் குடிமக்கள் எல்லாம் அரசனுடைய செங்கோலை நோக்கி வாழ்கின்றனர் என்பது அதற்கு பொருள்.**

நாடாளுமன்றத்திற்கு பிரதமர் செங்கோலை வைத்துவிட்டால் மட்டும் போதாது. செங்கோல் தவறாமல் பாரபட்சம் இல்லாமல் ஆட்சி நடைபெற வேண்டும். நிதிபகிர்வு இருக்க வேண்டும். அப்படியா ஒன்றிய அரசு நடந்து கொள்கிறது?

**விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதார விலை அறிவிப்பு இல்லை. நதிநீர் இணைப்புத் திட்டம் இல்லை. கல்வித் துறைக்கு புதிய திட்டம் இல்லை. விலைவாசியைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள் இல்லை. ரயில்வேக்கான நிதி குறைக்கப்பட்டுள்ளது. காப்பீட்டுத் துறையில் அந்நிய முதலீடு என்பது எல்.ஐ.சி.யை ஒழிக்கும் திட்டமாகவே பார்க்க வேண்டும். மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்துக்கு தர வேண்டிய நிதியைத் தரமுடியாத அளவுக்கு தரைமட்டத்தில் இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசின் நிதிநிலைமை.**

பீகார் வாக்காளர்களை நம்பி நிதிஷ்குமார் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்து கொள்வார். அதற்கு நிர்மலா சீதாராமன் என்ற ஒன்றிய அமைச்சர் எதற்கு? பா.ஜ.க.வுக்கு வாக்களிக்காத மாநிலங்கள் புறக்கணிக்கப்படுகின்றன.

**உயிர்கள் வாழ்வதற்கு மழை தேவைப்படுவது போல ஒரு நாட்டின் குடிமக்கள் வாழ்வதற்கு ஒன்றியத்தில் ஒரு நல்லாட்சி தேவை.**

ஈர நிலங்களைப் பாதுகாப்பதில்

# திராவிட மாடல் அரசு உறுதியாக உள்ளது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, பிப். 3 - ஈர நிலங்களைப் பாதுகாப்பதில் ‘திராவிட மாடல்’ அரசு உறுதியாக உள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

உலக ஈர நிலங்கள் நாளை முன்னிட்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

உலக ஈரநிலங்கள் நாளான இன்று, ராமநாதபுரம் மாவட்டம் சக்கரக்கோட்டை மற்றும் தேர்தங்கல் பறவைகள் காப்பகங்கள் புதிய ராம்சர் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ள செய்தியைப் பகிர்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இத்துடன், தமிழ்நாட்டில் உள்ள ராம்சர் பகுதிகளின் எண்ணிக்கை இந்தியாவிலேயே மிக அதிகமாக 20ஆக உயர்ந்துள்ளது. இவற்றில் 19 இடங்கள் நாம் 2021இல் தமிழ்நாடு ஈரநிலங்கள் இயக்கம் தொடங்கியதற்குப் பிறகு ராம்சர் பகுதிகளாக அறிவிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

ஈரநிலங்களைப் பாதுகாப்பதில் நமது திராவிட மாடல் அரசு உறுதியாக உள்ளது. வளமான நமது இயற்கை மரபைக் காக்க மேலும் பல ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுப்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

பிப் 6, 7 தேதிகளில் வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தீர்மானம்!

நெல்லை, பிப்.3 - நெல்லை கிழக்கு மாவட்ட கழக அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சா.ஞான திரவியம்,ஆ.பிரபாகரன் சித்திக், மாவட்டப் பொருளாளர் ஜார்ஜ் கோசல், மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம்,விவசாய தொண்டரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாநில தேர்தல் பணி செயலாளர் ராஜம் ஜான்,மாவட்ட துணை செயலாளர்கள் மாஞ்சோலை மைக்கேல்,நம்பி,தமயந்தி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் நெல்லை மாவட்டத்திற்கு வருகை தருவதை முன்னிட்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நிகழ்வில் இராதாபுரம் தொகுதி பார்வையாளர் சிவராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் ராமச்சந்திரன், அபூபக்கர், கணேசன், சாந்தி சுபாஷ், பரமசிவஜயப்பன், கனகராஜ், எட்வின் வளன்அரசு, ஒன்றிய செயலாளர்கள் கே.எஸ்.தங்கபாண்டியன், போர்வெல் கணேசன், சிவனு பாண்டியன் என்ற பரணி சேகர், முத்துப்பாண்டி என்ற பிரபு, முத்துக்கிருஷ்ணன், சுடலைக்கண்ணு,ஆரோக்கிய எட்வின், பி.சி.ராஜன், செல்வ கருணாநிதி, ஞா.சேவியர் ராஜா, ஜோசப்பெல்சி, வி.எஸ்.ஆர். ஜெகதீஸ்,

நகர செயலாளர் கணேசன், பேரூர் செயலாளர்கள் முத்து கணேசன், இசக்கிபாண்டி, சுப்பையா, மணிஷா செல்வராஜ், சிந்தாமதார், மணிகண்டன்,டி. வானுவாமலை, முருகையா பாண்டியன், கசமுத்து ஜான் கென்னடி, தமிழ்வாணன், அயூப்கான், மாவட்ட அணி அமைப்பாளர்கள் இளைஞரணி ஜான்ரபீந்தர், மாணவரணி அலெக்ஸ் அப்பாவு, வழக்கறிஞரணி செல்வ சூடாமணி, மகளிரணி மல்லிகா அருள், மகளிர் தொண்டரணி ஆண்டனி பிரேமா, தகவல் தொழில்நுட்பணி பிரேம் ஆனந்த், விவசாய அணி மாடசாமி, விவசாய தொழிலாளரணி ராஜா சங்கரலிங்கம், இலக்கிய அணி நெல்லை மணி, கலை, இலக்கியப் பேரவை அணி நெடுஞ்செழியன், வர்த்தக அணி ஏ.ஆர். ரகுமான், ஆதி திராவிடரணி பாலச்சந்தர், சிறுபான்மை அணி திருப்பதி ஜெயசீலன்,தொண்டரணி முருகன், அயலக அணி பீர்மைதீன், அமைப்புசாரா அணி பிரகாஷ், மீனவரணி சகாய பிரபு, சுற்றுச்சூழல் அணி முருகன், அணி துணை அமைப்பாளர்கள் தில்லை ராஜா, அருள்ராஜ், மனோஜ்குமார், ஆகாஷ் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

முதலமைச்சர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டத்திற்கு 06.02.2025 , 07.02.2025 அன்று வருகை தர இருக்கிறார்கள். அன்றைய தினம் நமது கிழக்கு மாவட்டத்தின் சார்பாக முதலமைச்சர் தளபதியார் அவர்களை வரவேற்கும் வண்ணமாக சிறப்பான வரவேற்பு கொடுக்க வேண்டும். என இக்கூட்டம் ஒரு மனதாக தீர்மானிக்கிறது.

மதுரை அரிட்டாபட்டியில் ஒன்றிய அரசால் மக்களை வஞ்சிக்கும் டங்ஸ்டன் திட்டத்தை சட்டமன்றத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றி மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்த முதலமைச்சர் அன்புத் தளபதியார் அவர்களுக்கு இக்கூட்டம் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

நெல்லை மாவட்டத்திற்கு சுமார் 6,500 கோடிக்கு மக்கள் நலத்திட்டங்களை துவங்கி வைக்கவும்,50,000 ம் நபர்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கவும், புதிதாக மக்கள் நலத்திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவும் வருகை தரும் முதலமைச்சர் அன்புத் தளபதியார் அவர்களுக்கு நெல்லை கிழக்கு மாவட்டத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அண்மையில் வெளியிட்ட இரும்பின் தொன்மை என்ற ஆய்வறிக்கையின் மூலம் 5,300 ஆண்டுகளுக்கு முன்பே நம் தமிழர்கள் இரும்புத்தாதிலிருந்து இரும்பை பிரித்தெடுத்து கருவிகள் செய்யும் தொழில்நுட்பத்தை அறிந்த உலகின் மூத்த முன்னோடி நாகரீகம் திராவிட நாகரிகம் என்பதை ஆய்வு பூர்வமாக நிரூபித்துள்ளோம். இதன் மூலம் தமிழர்களின் நாகரிகத்தை உலகிற்கு எடுத்துக்காட்டிய முதலமைச்சர் அன்புத் தளபதியார் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

கழகப் பணியையும், மக்கள் நலப் பணிகளையும் விரைவாக செய்வதற்கு நெல்லை கிழக்கு மாவட்டத்திற்கு உறுதுணையாக இருந்து தொண்டர்களையும்,கழக நிர்வாகிகளையும் ஊக்குவித்து சிறப்பாக பணியாற்ற மாவட்ட கழகத்திற்கு ஆக்கமும்,ஊக்கமும் அளித்து வரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கழக முதன்மைச் செயலாளர் கே என்.நேருக்கு இக்கூட்டம் மனதார நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

நெல்லை கிழக்கு மாவட்டம் இராதாபுரம் மேற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப பணி ஒருங்கிணைப்பாளர் அன்றோ சந்தியாகு அக்ஸில் அவர்களது தாயார் எல்சி புளோஸ் (ஆசிரியை) மறைவிற்கும்.பத்தமடை பேரூர் கழக முன்னாள் செயலாளர் மாவட்ட பிரதிநிதியுமான எஸ்.கே.காளிமுத்து என்ற செல்லப்பா அவர்களின் மறைவிற்கும் இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், இரண்டு சட்டமன்றத் தொகுதிகளில் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 04.02.2025 செவ்வாய்க் கிழமை | மாலை 4 மணி | 1 | சைதாப்பேட்டை | எஸ்.பி.எஸ். திருமண மண்டபம், சைதாப்பேட்டை, சென்னை |
| | | | மாதவரம் | ஜி.பி.எல். மஹால், லட்சுமிபுரம், கொளத்தூர், சென்னை |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 02.02.2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி